# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2013 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம்

---

*(2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2013, மாச்சு மாதம் 22 ஆம் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 4.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2013 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம்**

[2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஒ 1/2013

**2006ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக.

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.*

**1.** இச்சட்டம், 2013ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2013ஆம் ஆண்டு ஏப்பிரல் 1 ஆந் தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

*2006ஆம் ஆண்டின் 13ஆம் இலக்கச் சட்டத்தின் 2ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2012ஆம் ஆண்டின் 11ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறு 2006ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தின் 2ஆம் பிரிவானதுஅப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவால் இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) (அ) என்னும் பந்திக்கான காப்புவாசகத்தில் "இருக்குமிடத்து, அத்தகைய" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இருக்குமிடத்து, எந்த மொத்த விற்பனை வரவிலிருந்ததான இலாபங்கள் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுகின்றனவோ அந்த ஏதேனும் மொத்த விற்பனை வரவு தவிர்ந்த அத்தகைய";

(2) (ஆ) என்னும் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியின் (ix) என்னும் விடயத்தில் "வருவாய்கள்; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக"வருவாய்கள்;"; அத்துடன்

(3) (ஆ) என்னும் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியின் (ix) என்னும் விடயத்தினை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயங்களைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(x) அரசாங்கத்தின் சார்பில் ஏதேனும் பொதுக் கூட்டுத்தாபனத்தினால் கட்டணம் இன்றி ஏதேனும் சேவையை வழங்குவதற்கென திரட்டுநிதியிலிருந்து

2-PL 007077 -1115 (2013/03)

பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்பட்ட நிதிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஏதேனும் கடன் ; அத்துடன்

(xi) ஏதேனும் சேதனப் பசளையின் உற்பத்தியாளரினால் அத்தகைய உற்பத்திப் பொருளின் விற்பனையிலிருந்தான வருவாய்கள்; அத்துடன்''.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 13ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3**. 2011ஆம் ஆண்டின் 11ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 13ஆம் பிரிவானது ''ஆள்''என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில் இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) (ஊ) என்னும் பந்தியில் ''பரஸ்பரநிதியத்தை,'',என்னும் சொற்களுக்குப் பதிலாக ''பரஸ்பரநிதியத்தை; அத்துடன்''; என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) (ஊ) என்னும் பந்தியினைஉடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினைச் சேர்ப்பதன் மூலமும்:-

''(எ) இலங்கை மத்திய வங்கி,''.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்